**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை துணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை: திருமதி.க.வேல்கண்ணி, எம்.எஸ்.ஸி.எம்.பில்.பி.எட்.,**

**செயல்முறை ஆணை எண். நிர்2/9936/2021** **நாள். 15.03.2022**

பொருள் : பணியமைப்பு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை – வேலைவாய்ப்பு பிரிவு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தொகுதி–IV பணிகள் – 2018–2019 மற்றும் 2019–2020ம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான பட்டியல் பெறப்பட்டு பணியமர்த்தல் ஆணைகள் வெளியிடப்பட்டது – பணிவரன்முறைபடுத்தி ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக

பார்வை :

1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.23654/PSD–1/2020, நாள்.29.05.2020
2. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிர்2/8465/2020, நாள்.24.07.2020
3. துணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிர்2/8465/2020, நாள்.28.07.2020

*******

**ஆணை :–**

பார்வை (1)ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வழி தெரிவு செய்யப்பட்டு, பார்வை (2)ல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களது செயல்முறை ஆணையினைத் தொடர்ந்து, பார்வை (3)ல் காணும் துணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களது செயல்முறை ஆணை வழி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வரும் பின்வரும் இரண்டு பணியாளர்களது இளநிலை உதவியாளர் பதவியில் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் தங்களது பணி வரன்முறைப்படுத்தப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1. | திரு.ட்டி.பிரதீப்,<br>இளநிலை உதவியாளர் | 05.08.2020 மு.ப |
| 2. | திரு.எம்.வசந்தன்,<br>இளநிலை உதவியாளர் | 10.08.2020 மு.ப |

மேலும் இவர்கள் தம்மூன்றாண்டு கால தொடர் பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தபடுகின்றனர்.

இச்செயல்முறை ஆணையினைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை உடன் அளிக்கப்பட வேண்டும்.

துணை இயக்குநர் (நிர்வாகம்) (பொறுப்பு)

பெறுநர்

1. திரு.ட்டி.பிரதீப், இளநிலை உதவியாளர், இயக்ககம், சென்னை-32
2. திரு.எம்.வசந்தன், இளநிலை உதவியாளர்,
   மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
   மயிலாடுதுறை – உரிய வழியாக

நகல்

1. துணை இயக்குநர் (நிர்வாகம்), ஓ.வி. பிரிவு, இயக்ககம்
2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்
   மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மயிலாடுதுறை